01-10-2016

# படைப்பு

சமூகத்தின் இணைப்பு

## மின் இதழ்

பதிப்பு -5



## அந்த போதிமரத்தின் கதை

---------------------------------

கடந்த வசந்த காலத்தின்
நாளொன்றில்தான் வெட்டப்பட்டது
நூற்றாண்டுகள் பல கடந்தும்
ஒரு புத்தனை மட்டுமே
உற்பத்தி செய்திருந்த
அந்த போதிமரம்

அணில்களாடிய அதன் கிளைகள்
அடுப்பெரிக்க உபயோகப்பட்டன
இலைகள் ஆடுகளுக்கு இரையாயின
வேர்கள் கஷாயமாகும் பொருட்டு
தற்போது தண்ணீரில்
கொதித்துக்கொண்டுள்ளன

அதன் கட்டைகள் குறித்தான
தகவல்கள் கிட்டவில்லை
அவற்றால் கோயில் கதவுகள்
செய்யப்பட்டதாக
அனுமானிக்கப்பட்ட நேரத்தில்
ஆடு மேய்ப்பான் ஒருவன்
அறையப்பட்ட சிலுவையில்
இலேசாய் வீசிக்கொண்டிருந்தது
அந்த போதிமரத்தின் வாசனை.

--- ஆனந்த குமார் தங்கவேல்

## குதிரை கழுதையான கதை

---------------------------------

அந்தி கவிழும் முன்னதாக
ஒரு இளவரசன் தன் சகாக்களோடு
வீதியுலா துவங்குகிறான்
அவனுக்கு அவனாகவே நன்னாள் குறித்து
சூட்டிக்கொண்ட பெயர் தான் கவிஞன்
வீதியுலாவின்போது கும்பிடுகள்
பலமாக இருக்கவேண்டும்
தோள் துண்டு இடுப்பிற்கு கீழ்
இறங்குதல் நலம்
ஒவ்வொரு ஊரின் நுழைவாயில்களிலும்
இளைஞிகள் ஆரத்தி எடுத்து
பொட்டிடுதல் கண்டிப்பிற்குரியது
சரித்திரத்தில் போர் கண்டதில்லை
யானை ஏற்றம் குதிரை ஏற்றம்
வேடிக்கை பார்த்ததுண்டு
வாழ்த்தவும் வெள்ளைக் கொடி ஏந்தவும்
ஜாலராக்களின் கூட்டம் எப்போதும் உடன்
வேட்டை ஞாபகம் வந்தால் லேஸ்
பாக்கெட்டோடு
அனிமல் பிளானட் முன்னால்
தற்போது கூட ஒரு கவிதையை
குதிரையில் ஏற்றிவிட்டு கொக்கரிக்கிறான்
அவன்
அந்தக் குதிரை கழுதையைப்போல்
கனைத்துக்கொண்டு ஓடுவதில்
நாம் ஆச்சர்யப்பட என்ன
இருக்கிறது..........!!

--- சுஜய் ரகு

எளிதில் வலுவிழந்துவிடுகின்றன மரண
ஆயுதங்கள்...

----------------------------------

இந்தக் கயிற்றில்
என் பெயர் எழுதப்பட்டிருக்கிறது.
எந்த மருத்துவரின் கத்தியில்
எந்த சவப்பெட்டியின் ஓரத்தில்
எந்த சிதைமூட்டும் தோழனின் கைகளில்
என் பெயர் எழுதப்பட்டிருக்குமென்று
தெரியவில்லை.
நானாகவே இந்த மரணத்தைத் தேடிப்
போகிறேன்
எதிர்வரும் ஒருசில நிமிடங்களைக் கடந்தால்
போதும்
எளிதில் மரணப் பாதைக்குள்
நுழைந்துவிடுவேன்.
இந்தச் சமூகத்தைப் பழி தீர்க்கவே
இப்படியொரு தீர்க்கமான முடிவு
தலைப்புச் செய்திக்குக்
குறைவில்லாது எழுதிவைத்திருக்கிறேன்
என் இறுதி வாக்குமூலத்தை.
யாவரும் என்னை இழந்து துடிக்கட்டும்
கதறி அழட்டும்
என்னைப் பிரிந்து தவிக்கட்டும்
சதா என் நினைவில் கிடந்து உழலட்டும்.
உதாசினத்தின் வலியும்
அவமானத்தின் வடுக்களும்
மறுதலிக்கப்பட்டதன் வேதனையும்
அனிச்சையாகவே
சுருக்குக் கயிறை
என் கழுத்தில் கோர்த்து விட்டது.
குரல்வளை முழுவதும்
இறுக்கிய நொடியில் தான்
என் நினைவுக்கு வந்தது
இப்போது எவராலும் நினைக்கப்படாத
எதிர்வீட்டு சாந்தி அக்காவின்
துர்மரணம்.

--- ஆண்டன் பெனி

ஊர்த்திருவிழா

------------------

மேனியெங்கும்
சில்லறை சிதறிக்கிடந்த
தெரு ஓவியத்தில்
இதயம் கிழித்து
இறைவனின் முகம்
காட்டியிருந்தான் ஓவியன்.
கரித்துண்டுகளும்
சுண்ணக்கட்டிகளும்
சாகாவரம்பெற்று
சாலைகளைக் கோயிலாக்க
உயிர்ப்பின்றி
உயிர்வாழும் போராட்டத்தில்
ஓவியத்தை வெறித்தபடி
வயிறு கிழித்து வறுமை
காண்பிக்கவியலா
விரக்தியில்...
தன் குடும்பத்தோடு
தெருவிலமர்ந்தபடி
கடந்து செல்பவர்களின்
கண்களை ஊடுறுவும்
கலைஞனைத் தரிசித்தபின்
வழிப்போக்கனாய்
எதை ரசிக்க
ஊர்த்திருவிழாவில்.

--- குமரேசன் கிருஷ்ணன்

ரணங்களின் கூடாரங்களில்
குடியிருந்து கொண்டேதான்
ஒரு ரோஜா தோட்டத்திற்கான
கனவு காண முடிகிறது....

நெருப்பு சுவாலையில்
வெந்து கொண்டேதான்
பனித்துளி குமிழ்களுக்கான
சிந்தனைகளை சேகா¨க்க முடிகிறது

முள் படுக்கையில்
படுத்துக் கொண்டேதான்
உலகையாளும் உபாதைகளை
பிறப்பிக்க முடிகிறது.....

சுடு மணல் பாதைகளில்
பயணித்த படியேதான்
நிரந்தர நிழல் தாங்கிகளின்
தோரணங்களை
யூகிக்க முடிகிறது.....

சீல் வடியும் புண்ணோடுதான்
சிலந்தி கூட்டின் நுட்பமறியும்
நுண்ணறிவு புலனாகிறது....

இங்கு புஸ்பங்களை
விதைப்பவனை விட
புதைப்பவனுக்குதான்
புகழாரம் குவிகிறது....

எனினும்
நீ மறுதலிக்காமல்
வாழ்க்கையோடு பயணித்து விடு
யூதாசும் உண்டு
தேவனும் உண்டு....

சற்றே....!
நிதானித்து யோசித்தால்
மனிதனும் உண்டு.....

--- சுயம்பு

தொலைத்து அலைந்து தேடி
பின்னும் ஆயாசமாய் அடங்கும்
சரீர ஆக்கம் இரு சுருள் வடிவ
பின்னலினால் கட்டப்படுகிறது

இடையிடை கோடுகளால்
இரு முனைவும்
பின்னிப் பிணைகையில்
ஊர்ஜிதமாகிறது
"நான்" உருவாக

காதலின் மாற்றம்
விகாரமாய் புணர்கிறது

சீராய் ஓடிய
உடலின்....ஆன்மாவின்....
உச்சி
விளிம்பு
முகம்
அத்தனை கோணத்திலும்

முரண்பாடு
ஒழுக
திரும்பவும் அலையவிடப்படுகிறது
மிருகம்

--- மொழி

மைக்கிலேஞ்சலோவின்
கடைசீ தீர்ப்பில்[ஓவியம்]
காவிரிக்கான நிரந்தர தீர்வைத் தேடுகிறோம்..
ஹோமரின் மிதவை இலைகள்
இத்தாலிய நதிகளில் எதிர் நீச்சலிட்டதை
இலக்கியம் என்கிறோம்..
நைல் நதிக்கரைகளில் நீர் அள்ளிய
அலுமினியக் குடங்கள்
உடைக்கப்படவில்லையென்று
கவிதைகள் எழுதுகிறோம்..
ராமனையும் சீதையையும் இலக்குவனையும்
கங்கை மீது ஏற்றிவந்த குகனின் ஓடத்தில்
ஒட்டியிருந்த ஓலைச்சுவடியில் தான்
வசிட்டமுனி ராமாயணம் எழுதியதாக
புல்லரித்துப் போகிறோம்..
இதோ இப்போது மேட்டூரில்
தேங்கிய புது நீரில் மிதந்து கொண்டிருக்கும்
காய்ந்த கன்னட இலையொன்றில்
நம் தமிழனின் நிர்வாணம்
மிதக்கிறதே ..
இதை என்னவென்போம்..?

--- ராகவபிரியன்

வசீகரிக்கும் புள்ளிகளும்
வாகாய் இழுத்த இழைகளுமாய்
அப்போதுதான் முடித்த
அழகுக்கோலம் உன் வாசலில்!

அடர்ந்த பனிக்காற்றில்
இன்னமும் அங்கே
நிறைந்திருக்கிறது
உன் மணம்!

நீ
அகன்று போன முற்றத்தில்
அது என்னோடு
பேசியபடியிருக்கிறது!

உன்னைப்போலவே
நீ இழைத்த கோலமும்
அதிகபட்ச அழகோடு!

உன்
கோலத்தைச் சுற்றிப்
பதிந்து கிடக்கிற
மெத்துமெத்தென்ற
உன் பாதத்தடங்கள்!
அதில் புரண்டு புரண்டு
புளகித்துப் போகிறது
இந்தப் பாவிமனம்!

உன் வாசமும் சுவாசமும்
பின்னிப் பின்னி இரகசியமாய்
ஒளிர்ந்துகொண்டிருக்கின்றன
அதைச் சுற்றிலும்!

எல்லோரும் பாராட்ட
அந்தக் கோலம் இருக்கிறது!

நான் மட்டும்
பரவசப்பட இந்த அற்புதத்
தடயங்களிருக்கின்றன
அருவமாய்!

--- வளவன் கரிகாலன்

யோக்கியர்கள் எவரேனும் வரக் கூடும்

----------------------------------

அவரின் இறுதி ஊர்வலத்தில்
உறுதியாய் மலர்களைத் தூவும்
நம் மனங்களின்
கனிவான கவனத்திற்கு..!

அவர்
கவனிப்பிற்காய்
காத்துக் கிடந்த
கணங்களில்,
கண்டும் காணாமலுமே
கடந்து சென்றவர்கள் நாம்..!!

உதடுகளால்
உதவிகளும், ஒத்தாசைகளும்
கேட்டு விடுவாரோ
எனும் பயத்தில்
ஓடிப்போய்
ஒளிந்தவர்கள் நாம்..!!

முன்னாள் நண்பன் தான்
என்றாலும் - இந்நாளில்
என்ன செய்து விட முடியும்
என்னால் அவனுக்கு -
என்றே விவாதங்களில்
தொலைந்தவர்கள் நாம்.!!

உதவிகள் பல செய்தவர் தான்...
சேவைகள் சில கண்டவர் தான்..!!

சுயநலம் என்பதை
மறந்தவர் தான்..
பொதுநலம் நோக்கி
வாழ்ந்தவர் தான்..!

முடிந்தால் செய்வதும்,
முடிந்தவரை செய்வதும்
வெவ்வேறு தான் என்றாலும் ..!!

இந்நாளில் என்னால்,
ஒன்றாயினும் செய்ய
வியலாது என்றே கடந்து சென்று
கடமை கழித்தவர்கள்
தானே நாம் எல்லாம்..!!

எல்லாம் முடித்து
இறுதி மூச்சும் மொத்தமாய்
தொலைத்து,
இறுதி ஊர்வலமும் கழித்து ,
இல்லாமையில் கண் கசக்கும் - அவரது
இல்லாளுக்கு ஆறுதல்
வார்த்தைகளைக் கூற
வேறு யோக்கியர்கள்
எவரேனும் வரக் கூடும்
நம்மைத் தவிர்த்து..!!

கடந்து சென்று மீண்டும்
கடமையைக் கழிப்போம்..!
கடனைத் தொலைப்போம்.!

காலம்கடந்தகனிவு..
யோக்கியர்கள் எவரேனும்
வரக் கூடும்...

--- Abbas Al Azadi

எங்கள்
பாட்டனையும் பூட்டனையும்
செருப்பு போட அனுமதிக்கவில்லை..

மலத்தையும் தீட்டுதுணியையும்
அள்ளி அள்ளி அதன் நாற்றங்கள்
எங்களிடமிருந்து போகவேயில்லை..

அந்தரங்க மயிர் மலிக்க சொல்லி
எங்கள் நிறத்தை பழித்த
வடு மனதிலிருந்து மாறவேயில்லை..

மாடாகத்தான் உழைத்தோம்
மானம் ரோசமில்லாமல்
மாடாகத்தான் வாழ்ந்தோம்..

எங்களுக்கென வானமிருந்தது
சிறகுகளை வெட்டினார்கள்..

எங்களுக்கென கைகள் இருந்தது
விரல்களை பறித்தார்கள்..

எங்களுக்கென மொழிகள் இருந்தது
வார்த்தைகளை பிடுங்கினார்கள்..

எங்களுக்கென கனவுகள் இருந்தது
காட்சியை மறைத்தார்கள்..

எங்களுக்கென கோபங்கள் இருந்தது
ஆயுதங்களை அழித்தார்கள்..

எங்களுக்கென சுயம் இருந்தது
மரியாதையை வெறுத்தார்கள்..

எங்களுக்கென உரிமை இருந்தது
நீதியை உடைத்தார்கள்..

எங்களுக்கென வாழ்க்கை இருந்தது
சாதியும் அழுகையும் கொடுத்தார்கள்..

சுய மரியாதை சுடரே..

நீ பிறந்த பின்பு தான்
எங்கள் பாட்டன் பூட்டன்
இடுப்பிலிருந்த துண்டு
தோளிற்கு போனது..

பகுத்தறிவு பகலவனே..

எங்கள் முதுகில் எழுதிய
சாதிய ஆதிக்கத்தை
அழித்தது நீதானே..

எங்கள் பெரியாரே..

உன் நரை முடியெல்லாம்
வேர் விட்ட போதி மரம்..
உன் கருப்பு சட்டை
எங்கள் வரலாற்றின்
அட்டை படம்..

எங்கள்
பறையிசை அதிர அதிர
உன் புகழ் இவ்வுலகம் பாடும்..

--- கோபி சேகுவேரா

சின்னத்தாயின் அம்மாவை
நெப்போலியன் கத்தியால்
குத்திய போதும்
பொன்னுமணியின் மாமா மகள்
சிந்தாமணி பைத்தியமான போதும் அழுத
லெட்சுமி தியேட்டர்
லக்ஷ்மி மஹாலாகி விட்டது

கோவைசரளாவின் சேலையைப் பிடித்து
இழுத்து
வாடி பொட்டப்புள்ள வெளிய என்று
வடிவேலு குடித்து விட்டு ஆடிய
பார்வதி தியேட்டர்
பார்வதி ஷேஷ மஹாலாகி விட்டது

நிக்கட்டுமா போகட்டுமா
நீலக் கருங்குயிலே என்று
தட்டை உருட்டி விட்டு பாடிய
பெரிய வீட்டு பண்ணைக்காரனை பார்த்த
ராயல் தியேட்டர் போத்தீஸின் சூப்பர்
மார்கெட்டாகி விட்டது

கனேஷ் என பெயர் மாற்றியிருக்கும்
பாப்புலர் தியேட்டரோ
ஏதோ பெயருக்கு
துவைக்காத அழுக்கு வேட்டியில்
மங்கலான படம் ஓட்டுகிறது

தாராள தரிசனம் கண்ட
பக்தனே புகாரளிக்க
தானுண்டு தன் வேலையுண்டு என்றிருந்த
கேரள ஷகிலாவை பாளையங்"கோர்ட்டுக்கு"
இழுத்த
கலைவாணி தியேட்டர்
காணாமல் போய்விட்டது

அடிதடி சண்டைக்கு ஆசைப்பட்டு
ஆனஸ்ட் ராஜ், அசுரன் பார்த்த
அந்த சென்டிரல் தியேட்டர்
அடைத்தே கிடக்கிறது இப்போது

முன் இருக்கையில் தெரிந்தவர் இருக்க
வசனமாடா முக்கியம் படத்தில்
வசனத்தை மட்டுமே கேட்டு
கடைசி வரை தலை நிமிராமல் வந்த
சிவசக்தி தியேட்டர் இரும்பு
குடோனாகிவிட்டது

அழகிய லைலாவாக ஆட்டிப்படைத்து
உள்ளத்தை அள்ளித் தந்த
ரம்பாவை முதலில் பார்த்த செல்வம்
தியேட்டர்
அடுக்குமாடியாக அடையாளம் மாற்றிக்
கொண்டது

ம்ம்ம்... என்ன செய்ய.?
கவலைபட்டுக் கொண்டே
கைப்பேசியில் பதிவிறக்கி
கொண்டிருக்கிறேன்
மிச்சமிருக்கும் நாலு தியேட்டர்களில்
நாளை வெளியாகவிருக்கும் புதிய
படங்களை

--- மணி_அமரன்

இலகுவாக்கும் காற்றுவெளியில்
எதையும் கடந்து போகச் செலவு செய்யும்
கடலலை வந்து வந்து போக..
ஒன்றும் செய்யாத முகத்தோடு
கரையொதுங்கியிருந்தாள் சித்தி.
வெகு நேரம்
அலைகளிலிருந்து விடுபடாதவளின்
பார்வையைத் துளைத்து
சொற்களின் விளிம்பில் நின்றபடி
என்னாச்சி என்றேன்.
கைகள் கோர்த்து என் தங்கையுடன்
குளிக்கையில் தொலைந்து போன
பழைய வளையலை பற்றிச் சொன்னாள்.
இடுப்பளவு நீரிலிருந்த சித்தப்பா
கனத்த முகத்தை மறைத்த படி
அங்கயே இரு என கைகளாட்டுகிறார்.
தங்கை அழுது தீர்த்த கண்ணீர்
தொலைந்த வளையலோடு
தெரிந்த கொண்ட முகங்களோடு
வளைந்து நெளிந்து வருகிறது அலைகள்..
வெளியில் வந்தும்
ஓரமாகத் தான் இருக்கிறாள்.
அவளைத் தவிர பத்திரமாக இருக்கிறது
அவளிடம் ஒப்படைத்தவைகள்....

--- முருகன். சுந்தரபாண்டியன்

நேசமும் கற்று மற

----------------------

எப்போதும் போல
இப்போதும்
உன் அருகிருப்புகள்தான்
என் தூர தேசபயணங்கள்....!

விதிமீறல்கள் இல்லா
இலக்கியங்களில் நீயும்
பின்பு நானும் காட்சி மிகைகள்....!

உனக்கும் எனக்குமான
இடைவெளிகள் என்பது நமக்கான
மறதி ஞாபகங்களின்
பரவச தூரங்கள்....!

உறக்கமில்லா இரவுகளில்
நீ என் ஞாபக செலவு....!

மாய வார்த்தைகளின்
அகராதிகளில் - இனி
உன் பெயரும்....!

பாலைவனங்களில்
பயிர்செய்தல் போலவே
நீள்கிறது - உன் பார்வையில்
நான் திளைத்தல் என்பதும்....!

ஆர்பரித்துக் கொண்டிருக்கும்
கண்மணிகளை
வேண்டுமானால் கழட்டி எறிகிறேன்
கனவுகளில் மட்டும் நிறைந்துகிட போதும்....!

--- ஆனந்தி ராமகிருஷ்ணன்

மையத்தில் இருந்து முனைக்கு.

--------------------------------

கூர் அறத் தேய்ந்து
மழுங்கிய போர்வாளாய்
மந்தகாசம்
மெல்ல,மெல்ல
மறைந்திற்று

முன்னர் இருந்ததில்லை
இது போன்றதோர் சினம்
இப்போதுள்ள பயமும் அப்படியே

மிக அற்ப விடையங்களுக்கு
ஆவேசம் ஏன்
இதுதான் எனது
இன்றைய வேசமா?

போகிறேனா வருகிறேனா
இரண்டு பக்கமும் வழி
நான்கு பக்கமும் திசை
மத்தியில் நான்

கோழியத்தின் இறுமாப்பை
தாவீதின் கூழாங்கற்கள்
பதம் பார்ப்பதுபோல்
எனக்குள்ளும் ஒரு இது
பேர் சொல்ல முடியாத பிசகு
நேர்த்தியிலும் நேர்ந்து விடுகிறது
வல்லமையை குடை சாய்த்து
வலிமை கொள்கிறது
சிறு வலி

மூன்றாவது காலுடன்
முண்டியடிக்கிறது
ஆளக்கால்
பதித்தலைந்த அரவம்

பகலின் கடைசிப் படலை
சந்தடிகளற்று சாத்தப் பட
ஒளி துண்டித்த
பார்வையிலிருந்து
பாதை மறைய இப்பொழுது
இருள் கவியும்
இந்த இரவு எனக்கான
இறுதி இரவாகவும் இருக்கலாம்.

--- ரோஷான் ஏ.ஜிப்ரி

சின்னச் சின்னப் பொங்குகளில்
பொசுக்கிவைக்கப்பட்ட
இனத்தின் சரித்திரம்
மெருகூட்டி எழுதப்படுகின்றது
என்றபோதிலும்
வாசிக்கவும்
அதனைப் பற்றிய பின்னூட்டமோ
அதுகுறித்த நாவலோ
சிறுகதையோ
எழுதிக்கொண்டிருக்கலாம்
வாயை மூடிக்கொண்டு இருத்தல் வேண்டும்
துப்பிய எச்சிலைத் துடைக்கத் தெரியவில்லை
தமிழா உன் நெஞ்செழும்பில்
முறுக்கேறவில்லை இன்னும்
உனக்குள் தாழ்ந்துகிடக்கும்
வீரத்தீயை எப்போது மூட்டுவாயோ
அப்போது இணையும்
உனதுடல் நரம்புகளாய்
நதிகளும்...

--- திருமு

நாம் எல்லாம்
முகமூடிக்காரர்கள்
மனிதா!
எல்லாம்ம் அப்படியே
அவ்வப்பொழுதோ
அப்புறமோ
விளம்பி
வியந்து
எண்ணமெல்லாம்
இயம்பி இருப்பதில்லை.
இடத்திற்கும்
இதயத்திற்கும்
ஏற்றாற்போல்
அவரவரே
அணிந்து கொள்கிறோம்
முகமூடிகளை,
நாகரிகம் ஒழுங்கு
என்ற பெயர்களுடன்.
உயிர் இனத்தில்
மனிதரைத் தவிர
மற்றவையெல்லாம்
அப்படி இருப்பதில்லை.
இதோ...
நம் அடுத்த தலைமுறைக்கும்
கொடுத்து விட்டோம்
முகமூடி...
உள்ளதை மூடும்
உள்ள முடியை.,

--- அகராதி

திருப்தி
---------

கோதுமை மணிகளை
கோத்து எடுத்ததாய்
வடிவமைத்துச் செய்து
போதிய ஆழத்தில்
தழையத் தழைய
தொங்க விட்டிருந்தாள்
தங்கத் தாலிச் சரடு
சாதிமத வழக்கப் படி
வாக்குத்தத்தப் பெட்டகம்
நோக்கற்பாலதாய்
உருளையோ மணியோ
பக்கத்தில் இல்லாத
வக்கத்த நிலையில்
கோத்த கயிற்றில்
கோலமாய் ஆடியது.
ம்ம் இன்னும்
எத்தனை முறைதான்
சேட்டுக் கடைக்குச்
சென்று வருமோவென
கெட்ட எனக்கு
திருப்ப முடிகிறது
என்ற வரையில்
திருப்திதான் என்றாள்.

--- தா. ஜோசப் ஜூலியஸ்

சாலை
---------

ஒவ்வொரு மணித்துளிகளும் கேள்வியுடன்தான்
நகர்ந்து
முடிந்து
வியப்பைத் தூவி மீண்டும்
முளைக்கிறது

முடிந்த சரித்திரம்
தார்களுக்கிடையில்
நசுக்கப்பட்ட கற்களில் ஒட்டிக்கொண்டு
நெஞ்சை நிமிர்த்திய சாட்சியாக
அதீத மௌனத்தில்

மறக்கப்பட்டு மீந்து கிடக்கும்
மயான அமைதியில்
கருமைப் பூசிய உடலேந்தியபடி
கேட்பாரற்று நெடுந்தூரப்பயணம்

வெந்துப்போனப் பாதங்கள்
பதம் போட்டு உருவான
சரித்திரம் கரைந்தும்
தூசு தட்டப்படாத கோப்பையுமாய்

தார்ச்சூடு எழுப்பிய உஷ்ணப்புகை நடுவில்
எரிந்து தெரிந்த
தமிழன்
தமிழச்சி
கடும் உழைப்புடன் பயணிக்கும்
மீள்பார்வை

மிக நேர்த்தியாய் எழும்பப்பட்டது
கோணலால் கிடந்த காடு
மலையடியோரமாய் இருந்தது
தூரமாய்ப்போகவிட்டு
அடியெடுக்கக்கூட
தூரமாக இருக்கிறோம்

--- கா.இலட்சுமணன்

காலநதியின் போக்கில்
அடித்துச்செல்லப்படும்
மரணமில்லா
பயணத்தில்
இடைஞ்சலாகிப்போன
அடையாளத்தை
வேறாக்கி
அப்பாறப்படுத்தி,
ஒன்றுமே இல்லாததாகி
மிதந்து,
புதிய பதிப்பின்
கரையில் ஒதுங்கி
மீள்கையில்
தொடர்ச்சியின்மையில்
துண்டாடிப்போன
கடந்தவைகள்
என்றோ கண்ட
கனாவாக அறுபட்டு
துலக்கமின்றி
மாய்ந்தன..

செத்துக்கிடந்த
மேனியிலிருந்து
புத்துயிர்த்த
மெய்ம்மைக்கு.

--- திருமலை ஷகி

ஒரு புறநகர் வசிக்கும்
கம்பெனி தொழிலாளிக்கு
நீலம், கருப்பு வண்ணங்களில்
இரண்டு கால்சட்டைகள்தான் இருக்கின்றன
விஷேங்களுக்கு செல்ல
ஒரு வெள்ளை அல்லது சந்தன நிற
முழுக்கை சட்டை வைத்திருக்கிறான்
வெந்நீர் குளியலுக்கு
மார்கழியிலும்
பழகாதவன் அவன்
பண்டிகை நாட்களில்
அவன் சுமந்து வரும்
துணிக்கடை பைகளில்
அவனுக்கான உடையை
கடவுளர்கள் நெய்ததில்லை
பிள்ளைகளின் பள்ளிகள்
அவன் கருணைப்படிகளை
கருணையின்றி கொத்திப் போகின்றன
பால்காரர் முதல் பாங்க் காரர் வரை
மாதம் பிறந்தால்
அவனை தரிசிக்க வந்து விடுகிறார்கள்
அவனுடைய
முன்பதினைந்து தேதிகள்
முதலாளி அருளியவை
பின்பதினைந்து மார்வாடி இட்டவை
இவ்வுலக அறிவுக்கு
பக்கத்து வீட்டு நேற்றைய தினசரி
அவனுக்கு போதுமானதாக இருக்கிறது
மனைவி மக்கள் மறந்து செல்லும்
மின்விசிறி குழல்விளக்குகள் அணைப்பது
அவன் ஊழ்வினை ஆகியிருந்தது
உணவகங்களில் எல்லாவற்றையும்
செவிமடுத்து
" ரெண்டு இட்லி ..."
அனிச்சையாய் கேட்க
வாயும் வயிறும் பழகியிருக்கிறது
இரண்டாவது செருப்பும் அறும்போதும்
இன்னொரு கண்ணாடியும் உடையும்போதும்
மட்டுமே மாற்ற மனது வருகிறது....
இங்கு எல்லாம்தான் காசை வீசினால்
இருபத்தி நான்கு மணி நேரமும்
கிடைக்கின்றன,
அவன் இல்லத்துக்கு என்றேனும்
ஏதோ ஓர் அழைப்பிதழ்
தரச் செல்லும் நீங்கள்
அவனிடம் நிரந்தரமாய்
ஒட்டியிருக்கும் புன்னகையை
எங்குதான் பெறப் போகிறீர்கள் ..
இப்பெருநகரத்தாரே .?

--- ராம் வசந்த்

ரயில் பயணங்களின்
போதெலாம்
ஜன்னல் வழியே
நம் பெரும் கவலைகளை
பிடுங்கி தூர வீசிவிடுகின்றனர்
ரயிலோரத்தில் குதூகலித்து
சிரித்து நமக்கு டாட்டா
காட்டும் பழந்துணி
போட்ட பரட்டைத்தலை
தேவதைகள்...

--- உமா செந்தில்

நீ எழுதாத கவிதைகள்
எத்தனையப்பா
பிரபஞ்சத்தின் நட்சத்திரங்கள் அத்தனையும்
எண்ணிக் கொள்.
நீ எழுதாத
சிறுகதைகள் எத்தனையப்பா
கடற்கரையின்
குறுமணலை எண்ணிக் கொள் மகனே.
நீ சொல்ல தவறிய
வார்த்தைகள் எத்தனையப்பா
உலகத்தின் பசிக்கும் வயிறை நினைத்துக்கொள்
மகளே.
நீ எழுதாத நாவல்கள்
எத்தனையப்பா
உழைக்கும் கரங்கள் அத்தனையும் எண்ணிக்
கொள் மகளே
எங்களுக்கு
நீ விட்டுச் செல்லும்
வேத வாசகம் என்னப்பா
"இயல்பாயிரு"
நீ யாரெனக் கேட்டால்
என்ன சொல்ல அப்பா
உலக உயிர்களின் அத்தனை வலிகளையும்
பாட நினைத்த கவிஞனின்
வித்தெனச் சொல்
விடுதலையடைந்தவனின்
வேரெனச் சொல்
கூடில்லா பறவையின்
சிறகெனச் சொல்
கடைசியாக
ஒரு காக்கையின் குஞ்ஞெனச் சொல்.

--- துவாரகாசாமிநாதன்

முதல் முறை வந்தவனுக்கு
முக்கால் பாகம் முடியில்லையென
அம்மா கழித்தாள்.
அடுத்து வந்தவனுக்கோ
அரசில் வேலையில்லையென
அண்ணன் மறுத்தான்.
மூன்றாவதாய் வந்தவனோ
கையில் தழும்புவென
தானே தகர்த்தான்.
முப்பதாய் வந்தவுனுக்கும்
மறுதலிக்க இருந்தது
ஏதோவொரு காரணம்.
இடையில் மணமுடித்து வந்த
அண்ணிக்குமிருந்தது
என் குறைகள் பிறரிடம் சொல்ல.
வந்து பார்த்துப் போனவர்களின்
எண்ணிக்கை முன்னூறைத்
தாண்டிய பின்னரும்
பஜ்ஜிக்கும் சொஜ்ஜிக்குமென்றே
தனியான பகுதியொதுக்கிறார்
அப்பா தன் மாதாந்திர
நிதியறிக்கையில்.
அகவை முப்பத்தைந்து
தாண்டியபின்னர்
எனக்கொன்றும் அப்படித் தேவையாயில்லை
அந்தக் கல்யாணமும்
எந்தவொரு ராஜகுமாரனும்
தொடையிடுக்கில் உயிர்பிழியும்
வலியோடு வீணில் உதிரும் உதிரத்தில் கரையும்
மாதாந்திர வேதனையினின்று
நிரந்தரமானவொரு
விடுதலையைத் தவிர.

--- சுரேஷ் பரதன்

அறியாத அகவையில்
நெறிமுறை இன்றியே
ஓடி விளையாடினோம்!

தொடுதல் அணைத்தல்
தோள்மீது சாய்தல்
யாவும் களங்கமின்றி
யார் முன்னும் நிகழ்ந்தது!

பதின்ம வயதில்
பதுங்கிக் கொண்டோம்
பயம் கூட ஒட்டிக்கொண்டு
யாரும் சொல்லாமலே
பார்த்தும் பார்க்காததுபோல்
போர்வை கொண்டு
போக்கும் வரவும்
புதிதாகிற்று!

பருவமடைந்த போது
தவிர்க்க முடியாத உருவமாற்றம்
எனக்கும் உனக்கும்!

மனங்களில் மாற்றம்
வந்துவிடக் கூடாதென்றே
பெற்றோரும் உற்றோரும்
கண்களில் கண்களை
நுண்ணிதாய்ப் பொருத்தி
வேவுக்கு பதித்தாயிற்று!

இத்தனைக்கும் மத்தியில்
இனிதாய் இமைப் பேச்சில்
களங்கமில்லாமலே
காதலாகியது நம் நட்பு!

--- அகத்தின் அழகு (றெஜினா குணநாயகம்)

தோட்டத்துக் கற்றாழையின் நுனியில்
இருந்து சுவற்றினை லாவகமாக தாவிப்
பிடித்த சறுக்கலில், இருளில்
விழித் திறந்த குழந்தையின் முகமென
திணறி இருந்தது அதன் முகம்...
பின்னங்கால்கள்
நடுநடுங்கின....உடல்
கனத்தது... உருண்டை விழிகள்
பிதுங்கி வழிந்தன...
உள்ளத்தில் வழிந்த குறுகுறுப்போடு
சாளரத்தின் வழியாக எனது
வரவேற்பறைக்குள் தலைகீழாகத் தரை
இறங்கியபோது
நகர வாசம் அடைந்ததாக
திளைத்தது என் தோட்டத்து
பச்சைத்தவளை...

--- வித்யா சிவலிங்கம்

சொற்களின்
அடியாழத்தில் மிதக்கின்றன
என் வரிகள்;
வார்த்தையென்னும்
ஓயாத அலைகள்
பாறைகளில் மோதி
சிதறுகையில்
நனைகிறது
என் கவிதையின் நிலம்!

--- ந.சுரேஷ்

பிட்சாவும் அடைதோசையும்
--------------------------------

எட்டு அங்குல
விட்டத்தில் பிட்சாவுடன்
பிரெஞ்சு விரல்களும்
சிவப்பு மிளகாய்த் துகள்களும்
செம்பழுப்பு நிற மென்பானமும் பரிமாறி
வெறும் அறுநூற்றுத் தொன்னூற்றொன்பது
ரூபாய் வாங்கிக் கொண்டு
கண்ணாடிக் கதவுகளை
பவ்யமாய் திறந்து கொடுத்த
அந்த பன்னாட்டு சங்கிலித்தொடர்
உணவகத்தின்
வாசலில் செல்பி எடுத்துக் கொண்டிருந்தது
அந்த நண்பர்கள் குழுமம்
அவர்களின்
நடுத்தர குடும்ப அன்னைகள்
அடைதோசையும் எலுமிச்சை சாதமும்
வெண்பொங்கலும் பணியாரமும்
வத்தக் குழம்பும் தயாரிக்கும் பணியில்
மும்முரமம் காட்டிக் கொண்டிருந்தனர்
வந்தவுடன் பசியில்லையென்று
படுத்துக் கொள்ளுவார்கள் தம்மக்கள்
என்று அவர்களுக்குத் தெரிந்தாலும்
இந்தத் தலைமுறை
அவர்களிடமிருந்து
மெல்ல மெல்ல நழுவிப்
போய்க்கொண்டிருக்கிறது
என்பதை பாவம் அறிந்திருக்கவில்லை

--- ஜி ராஜன்

கட்டிலுக்குக் கீழ் புனிதம்!
--------------------------------

யாருமில்லையென்ற தைரியத்தில்
அறை புகுந்தவர்கள்
தங்கள் வசமிழந்து
தடுமாறி இயங்கினர்.

முட்டி மோதி
முயன்று தோற்று
ஆசைகள் அடங்காமல்
அதிரப் பாய்ந்து
பற்றி எரிந்தனர்.

கண்கள் செந்நிறமாக
எலும்புகள் நொறுங்க
உடல் சிலிர்க்க
களைத்து வியர்த்து
கட்டில் புரண்டு
கட்டி உருண்டு
கலவிக் களவு போயினர்.

எச்சில் பேச்சுகளையும்
கொச்சைச் செய்கைகளையும்
விழித்து முழித்து
செய்து அடங்கிய பின்
ஆளுக்கொரு பக்கமாய்
விழுந்து தூங்கினர்.

இவர்களுக்குப் பயந்துபோய்
கட்டிலுக்குக் கீழ்
ஒற்றை மரக்காலுக்கு இடையில்
ஒளிந்துகொண்டிருந்தது புனிதம்!

--- மனோ ரெட்

குடியை விடச்சொன்ன உன் மனைவி
கண்கள் பிதுங்கி கொலுசுகள் அடங்க
நீண்ட நாவோடு மின்விசிறியில்
ஒரு புழுவைப்போல்
துடிதுடித்து அடங்குகையில்
தடுக்கவியலாது நீ
மல்லாந்து கிடந்தாய்
மது போதையில்

இன்று உன் குழந்தைகள்
தூங்கிவிட்ட நள்ளிரவில்
காது நனைக்க நழுவும்
கண்ணீரோடு
சுழலும் மின்விசிறியையே
வெறித்துக்கொண்டிருக்கிறாய்

இனி ஒருபோதும்
அந்த மின்விசிறி
பின்னால் சுழலப்போவதில்லை.

--- நிலாகண்ணன்

மஸ்காரா விழிகள்
--------------------
நிலத்தில் சாயாத
வெயிலின் சாரத்தில்
கால்கள் பூக்க
சேற்று வயலில்
நர்த்தனமிடுகின்றன
சேறு பூசிய சோறிடும் கைகள்
என் ஜன்னலுக்கு வெளியே

நெடிய பயணத்தில்
தொலைத்த தன் இணையை
மூடிய கண்ணாடி வழி
தன் பிம்பமாய் முகர்ந்து
வாசனை தேடிக் கொண்டிருக்கிறது
இன்றும்
தலையில் மஞ்சள் சூடிய
அந்த நீலப் பறவை

இலை மறைவில்
கொஞ்சிடும் பூக்கள்
நுனி விரல் சிவப்பாய்

தென்றலின் வருடலுக்கு
உற்சாகத் தலையசைக்கும்
போன்சாய் மரங்கள்

இவையாவும் மறைந்த
வெள்ளை சுவர்களின் உள்ளே
செயற்கைகோள் தொலைதொடர்பில்
மார்ஸ் சேட் கிராம் சேட்
பயிற்றுவித்துக் கொண்டிருக்கிறேன்
உலகளாவிய தொடர்பிற்காய்...

--- கார்த்திகா ஏ.கே

அப்படியானதொரு நாளில்
-------------------------

அப்படியானதொரு நாளில்...
அவன்...
சுவாசிப்பதை உணர்ந்தான்
ஒரு மிடர் நீர்...
உணவுப் பாதையில் ஏற்படுத்தும்
குளிர்ச்சியை அனுபவித்தான்
இத்தனை வகைப் பறவைகளா
என-வியப்பாக வானம் பார்த்தான்

அப்படியானதொரு நாளில்
நெருங்கிவந்த மனைவியின்
இதழைத் தவிர்த்து விட்டு
இமைகளில் முத்தமிட்டான்
வியந்து பார்த்தவளை
காதலாய்த் தழுவினான்

மழை பெய்த நாளில்
மகனைத் தெருவிலிறக்கினான்
கடிந்த மனைவியின் முகத்தில்
மழைநீரை வாரியிறைத்தான்
சிலிர்ப்பை ரசித்தான்

இரவில் படித்துக் கொண்டிருந்த
மகளுக்கு தேநீர் தயாரித்தான்
உடனமர்ந்து பருகினான்
இரவில் தேநீர் என்பது
ஒரு வழித்துணை என்றான்

அப்படியானதொரு நாளில்...
சில்லரை தர மறந்த
நடத்துனரை மன்னித்தான்
பாதத்தை மிதித்தவனிடம்
புன்னகைத்தான்
எதிரில் அமர்ந்திருந்த
யுவதிடம்
இயல்பாய்ப் புன்னகைத்தான்
அவள் நாணத்தை ரசித்தான்.

அப்படியானதொரு நாளில்...
இனிப்புப் பைகளுடன்
சகோதரியிடம் சென்றான்
ஓரிலையில் உணவுண்டு
ஒரு பாயில் கண்ணயர்ந்த
பால்யங்கள் குறித்து பேசினான்
பேசும்போதே அழுதான்
அழுது விட்டு புன்னகைத்தான்
தங்கையின் மகனுக்கு
யானைச் சவாரியானான்
கண்ணீரும் புன்னகையுமாய்
விடை பெற்றான்
திடும்மென ஒரு
மலைப்பிரதேசம் சென்றான்
மலையுச்சியில் நின்று
'நான் சுதந்திரமானவன்'
என கம்பீரமாய்ச் சொன்னான்

அப்படியானதொரு நாளில்...
அவன்...
வேலையை விட்டிருந்தான்.

--- பரூக் மீரான்

ஜாதி மல்லீப்பூ
முல்லேப்பூ ..கனகாம்பரம்
என்ற குரலெழுப்பி
கோலமிடப்படாத
என் வீட்டின் வாசல் கடந்து
நிற்காமல் செல்கிறார்
மிதிவண்டியில்
பூக்காரர்..

வீட்டில் ..
ஊருக்கு போயிருக்கிறார்கள்
என்று சொல்ல வெளியே
நான் வரும் போது..!

இரண்டொரு நாளானாலும்
இரண்டு வாரங்களானாலும்
இனி ..
நீ இட்டு சென்ற கோலத்தை
நீரூற்றி கலைத்து விடக்கூடாது
என்ற பட்டறிவை
வார்த்தை புள்ளிகள் வைத்து
ஒரு கவிதையை கோலமிடுகிறேன்..
நீ வரும் வரை
அதுவும் இருக்கட்டும் ..
கலையாமல் !

--- கருணாநிதி சண்முகம் (கருணா)

நகராட்சிக் கழிப்பறைக்குள்
மெல்லப்பதித்த திருப்பாதங்களோடு சுழித்துக்
கொண்டே
நகர்ந்து விடும் பொழுதிலும்....

நெடிச்செறிவில் நாசிபொத்தி
பகரமாய் இடவலமென்று பாராமல்
காறி உமிழ்ந்து
செருமிக் கொண்ட பொழுதிலும்...

அறுந்துவிட்டிருந்த செருப்பை
உதறிவீசியபடியே தைக்கச்சொல்லி
ஏவிக் காத்திருந்த பொழுதிலும்....

உறைகளற்ற வெறுங் கைகளோடுதான்
சுரண்டியும்..வழித்தும்..துடைத்தும்
விட்டுக் கொண்டுமிருந்தோம்...

அப்பொழுதுகளில் சத்தமாகவே
அதட்டிவிட்டும் கடந்திருந்தீர்கள்...

வங்கிக் காசாளனாக
எம்பிள்ளையொருவன்....
வரிசையில் வரச்சொல்லிக் கேட்க....

அவம் புத்தி அப்படித்தானென
நமுட்டியும் விட்டு ....
வரிசையில் சேர்ந்து கொள்ளும்
நீங்கள்....

சத்தமாகவே சொல்லிவிடுங்கள்....
தலித்தென்றால்... எப்படித்தான்....?

--- கட்டாரி தமிழ்

(சு)வாசிக்க விடுங்கள் ,வெளியே

----------------------------

உள்ளே ,
அங்கு என்ன இருக்கிறது?

கல்லும் புழுவும்
பகுத்தறிவு மழுங்கலும்
மனப்பாட மைதானமும்
கிளிப்பேடு ஒப்புவித்தலும்
கற்றுச்சொல்லிகளின்
முனகலும் முழக்கமும் ...
வாழ்க்கை கரைந்து போகிறது
காணாமல்!

பசிக்குத் திருடாத பட்டாம்பூச்சி ,
ஊழலில் ஊறிடாத ஊர்க்குருவி-
சொல்லிக் கொடுக்கின்றன வெளியில் நிறைய
!

ஓணானின் தலையாட்டலில்
நெம்புகோல் தத்துவம்,குட்டையில் எருமை-
யுரேகா விளக்கம்!

நிறங்களை விளக்கும்
வானவில்,சமநிலை வகைக்கு
காற்றில் நிற்கும் கழுகு!

குயில் கற்றுக்கொடுக்கும்
எதிரொலி விதிகள்

நியுட்டனைத் தெரியப்படுத்தும்
மரங்கள்!

தலைப்பிரட்டை தவளை
வளர்சிதை மாற்றம்

குளத்தின், ஏரியின்
காலை-மாலை தண்ணீர்-
வெப்ப கொள்வினை-உமிழ்வினை !

கூட்டில் குருவியும் குஞ்சுகளும்
சேய்நலம் பேணல்
நாயின் வாயில் குட்டிகள்-
பெற்றோர் பாதுகாப்பு!

இப்படித்தான் அம்மா
வெளியில் எல்லாமும்...
வெளி விசாலாமானது-
வெளி விலாசமுள்ளது-
வெளி விஷயமுள்ளது. ..

உள்ளேதான் புழுவும்
புழுக்கமும் அடிகளும் வசவுகளும்
வெளியே என்னை
வா(வ)சிக்க விடு அம்மா...

ஆழமான தேடலும்
புரிதலும் நிஜமான வாழ்வும்
வெளியில் தானே அம்மா?

முளைவிடுவதும்
முளைப்பதும் -வெளியில் தெரிந்தே!
மண்ணுக்குள்ளேவேவா?
வெளியில்தானே அம்மா?
வெளி போதுமானது அம்மா
வெளி வேலியற்றது .

அங்குதான் எல்லாமும் அன்றுதான் ஆசிரியர்
நாள்...!!!!

--- அகன் (அமிர்தகணேசன்)

கைக்கிளையில் உலகம்
----------------------------

ஒரு கை வைத்தே
கைதட்ட முயல்கிறாய்

மற்றோர் மலர் கிடைக்கும்
என தெரிந்தும்
வண்டே உன் கால்களுக்குப் பதில்
ஆயுதம் தரிக்கிறாய்

மென்மை
புரியாமலேயே
வண்டே நீ
வன்புணர்வு கொள்கிறாய்

நோகாமல்
தேனெடுப்பதற்கு பதில்
கொடுக்குகளால்
கொட்டித்தீர்கிறாய்

இப்போதெல்லாம்
பூச்செடிகள்
நடுவதற்கே
நாட்டமில்லை
தோட்டக்காரனுக்கு

---அகதா செந்தில்குமார்

அகால காலம்
-----------------

காலம்
கருணையற்றது
ஓடிவர
திராணியற்றவனை
உதறிவிட்டு
ஓடுகிறது.......!

நீதி
அநீதிகளை
அலட்சிக்கிறது......!

ஆற்றலாளனை
கொஞ்சம்
ஆமோதிக்கிறது

நன்றோ.....
தீதோ....
வல்லமையுள்ளவனுக்கே
வரலாறு கொடுக்கிறது
எனில்

எழுது உன் பெயரை
காலத்தின்
முதுகில் மட்டுமல்ல
முகத்திலும்
எதிர்வரும் சந்ததி
நின்று கண்டு செல்லட்டும்
உன்
ஞானத்தின்
கர்வத்தை..........!

--- சட்டாம்பிள்ளை கோவிந்த சாமி

நாடோடிக் கடவுள்
-----------------------

இப்படியாக
ஓடிக் களைத்து
ஒரு முறை
என் வீட்டு வாசலுக்கும்
வந்திருந்தார் கடவுள்

அது ஒரு நீண்ட
கோடைக் காலம்

நீர் தேடி
உயிர் போய்விட
உடலாய்
நான் மட்டும்
அங்கிருந்தேன்

கூரையும் சுவரும் இல்லாமல்
எல்லா பக்கமும்
வாசலாக இருந்த
வித்தியாசத்தால்
கவர்ந்து வந்திருக்கக்கூடும்
அவர்

மங்கிய பொன்னெழுத்தில்
"கடவுள் சாதனை"
என்ற தலைப்போடு
ஒரு தடித்த புத்தகம்
அவர் மடியில்

பிறவியை விலையாகக்
கொடுத்தால்
உன்னையும் எழுதுவேன் என்றார்

ஆர்வமில்லை என்றதும்
புறப்பட்டு விட்டார்

அடுத்த முறை
மீண்டும்
வரக்கூடும்...
வரும்போது
நானும் உடன் வருவேன்
அந்த தடித்த புத்தகத்தோடு...!

--- ம. கனகராஜன்

நான் சுடப்பட்டு இறந்த இடத்தில்
இரண்டு, மூன்று வெட்டறிவாள்கள்
இறைந்து கிடக்கின்றன !
என்னைக் கொல்லாத ஒருவன்
அவன் தான் கொன்றதாக
எழுதி வைத்துவிட்டுப் போகிறான் !
பார்க்காத சில பேரும்,
பார்த்ததாகப் பதிவுச் செய்கிறார்கள் !
அப்பாவித் தோழியொருத்தி
காதலியாக வந்து சிக்கிக் கொள்கிறாள் !
நானே சேர்க்காத கூட்டம்
தானாக வந்து அழுகின்றது !
எரிந்து கொண்டிருந்த பஸ்ஸில்
எரித்தவனின் அம்மா இல்லை !
உடைக்கப் பட்ட கடைகளில் கூட
எனக்கான பொருட்கள் எதுவுமில்லை !
நானும் உங்களைப் போல்தான்,

எதற்கான மரணமென்று தெரியாமல்
இன்னமும் பிணமாக !

--- முகமதுபாட்சா

முதலில் இலேசாகவும் பின் வேகமாகவும்
அதிர்ந்து வீழ்ந்த மேவாய்
முன்னம்பல்லொன்றை
கதிரவனின் கண்கள் நுழையா
தம் உள்ளங்கைக்குள் மறைத்துக்
கொண்டவன்
சாணத்தினுள் திணித்து மண்ணிற்க்குள்
புதைக்க மணலை நனைத்துக் குளிர்ந்ததோர்
பெருமழை

இயற்கை நித்தல் நீரூற்றி உணவளிக்க
அடர் செவ் வேர்களோடு
திடமாய் கிளை பரப்பி
நன்னிலத்தில் மழை பலவற்றோடும்
துளிர் விட்டது
முப்பத்தியிரண்டு சிறு வெண் கனிகளோடு
அரைவட்ட மரமொன்று

உணவுத் தொழிற்சாலை பெருங்குழாய்
கக்கிய
புகை தின்று உடைந்திட்ட முகிழ்
வடித்த குருதியோடு புணர்ந்த காணி
தெளித்தச் சேற்றினால்
மஞ்சற் பூத்த வெண் கனிகளின் மேல்
இரசாயன பூச்சிக்கொல்லிகளை
நற்மணத்தோடு
தேய்த்தெடுத்தும் புகுந்திட்ட வண்டுகள்
பெருங்கடைப் பற்களிரண்டை
மிகு வலியினோடு அதிர்வுற வீழ்த்தியது
துற்நாற்ற நெடி விரவ

கனிகள் யாவும் அடற் மஞ்சளாய்
செம்மையாய், கருநிறம் பூசி
ஒவ்வொன்றாய் உதிர
கடைசிக் கனியும் சிறு சலனமுமன்றி
அவன் முதற் பல் புதைந்த
அதே இளங் காணியின்
கிழடுற்ற மேற்தோலின் பெரும் பிளவினுள்
புகுந்தது கதிரவன் களவு போக
வீட்டுக் கதவுகள், சாளரங்களை அஞ்சி
அடைத்து
மக்கள் கூறுமோர் அதே கிரகண நாளில்

மூக்குக் கண்ணாடியை துடைத்து அணிந்தும்
வானை நோக்கிய அவன் பார்வையில்
நீங்கா பழுப்பு நிறம் மட்டுமே எஞ்சி வழிய
துளி மழையாவது கண்ணிற்க்குள்
கண்ணீராய் நுழையுமெனக் காத்திருந்தவன்
ஊன்று கோலொடு நீந்தியபடி
கடந்திட்ட நாற்பது ஆண்டுகளுக்கு பயணிக்க
வேண்டித் தோற்கிறான்
நினைவலைகளிடத்தே...

--- றாம் சங்கரி

கரையை சேராத அலைகள்
அதிர்ச்சியில் நண்டுகள்
அங்கும் இங்குமாக அலைந்தபடி...

--- சாய்மாறன்

அவசர கல்யாணம்
-----------------------

கனவுகளை கொண்டு செதுக்கி
செப்பனிடப்பட்டு தங்க முலாம் பூசிய
வானவில் ஒன்றை பெற்ற பெருமை
அவளின் பெற்றோரைச் சாரும்

ஒழுக்கத்தின் கிரீடம் அணிந்து
பண்பாட்டின் ஆடை உடுத்தி
கலாசாரம் கடைபிடித்த
பெண்ணியத்தின் உறைவிடம் அவள்

அழகிய புன்னகையில் மறைந்திருந்த
சோகம் திடீர் விபத்தில்
கால்களை இழந்தாள்
உயிருள்ள பிணமாய்
அநாதையாய் ஒடுங்கிப்போனாள்

இரங்கல் பார்வைகள் மட்டும்
வீசிவிட்டு போக முடியவில்லை
இதயத்தில் ஒரு மூலையில்
அவள் மீது நான் கொண்ட காதலால்

சம்மதிக்க மறுத்தாள் முதலில்
அவள் அழகானவள் உள்ளத்தில்
கலங்கமற்றவள் கலங்கினாள்
எனக்காக என் உறவுகளுக்காக

எதிர்ப்புகளின் மத்தியில்
அழகிய கல்யாணம் கால ஓட்டத்தில்
சம்மதங்கள் சாந்தமாய் வந்து சேர
அழகானது நம் குடும்பம் இன்னும்....

--- ஆய்ஷா ஷப்னி

அருகில் வரவேண்டாம்
அங்கேயே நில்லுங்கள் ...

நீங்கள் சுமந்து வருவது
என் மீதான பரிவல்ல
என் வலியின் அடர்த்தியை
ஆய்வு செய்வதற்கான முயற்சி

வார்த்தைகளால் நலம் விசாரித்துவிட்டு
பின்சென்று புன்னகையால்
கைகுலுக்கிக்கொள்ளும்
உங்கள் கருணை எனக்கு வேண்டாம்

கண்ணீரைத் துடைக்க
நீளும் உங்கள் விரல்
என் கண்களைக் குத்தி
குருடாக்க முயல்வதாய்த் தோன்றுகிறதெனக்கு

குருதி வழிந்தோடும் காயத்தில்
கூர் தீட்டப்பட்ட ஆயுதத்தால்
மேலும் குடையும் குரூரத்தை விடக்
கொடுமையானது பொய் முலாம் பூசிய
உங்கள் அன்பு

ஆகவே
அருகில் வர வேண்டாம்
அங்கேயே நில்லுங்கள் ....

என் வாழ்வை நானே
வாழ்ந்து கொள்கிறேன் ....!!!

--- தனபால் பவானி

வாழ்க்கைப் பாடல்
-----------------------

பதவியெனும் மமதையினால்
பழசையெல்லாம் மறந்துவிட்டு
உதவியென்று வந்துநிற்கும்
உறவையெல்லாம் வெறுத்துக்கொண்டு
கதவடைக்கும் கயவர்களே..
கண்திறந்து பாருங்களே...

பிறவிக்காக உயிர் நமக்கு
இறைவன் போட்ட பிச்சை அதை
பிடுங்கிக்கொண்டு போனபின்னே
என்ன உண்டு மிச்சம்?
உயிரிருக்கும் வரையினிலே
உடனிருபோர் கூட
உயிர்பிரிந்து போகையிலே
வருவதில்லை கூட.. (பிறவி)

மனிதன் கொண்ட
தனியுடமைத் தனத்தால்
மண்ணில் வெட்டுக் குத்து
மரணம் என்னும்
பொதுவுடைமை அழைத்தால்
நாம் மயானத்தின் சொத்து
கண்ணை மூடிப் போகும்போது
என்ன கொண்டு போவோம்
கையைக் கூட விட்டுவிட்டு
காற்றாய் தானே ஆவோம்
காற்றாய் ஆகும் நாளில்
பிறர் சுவாசமாக ஆவோம் (பிறவிக்காக)

கருணை நிறைந்த உள்ளமென்ற பேரை
வாங்கி விட்டுப் போனால்
கடவுள் வாழும் உலகத்திலே நாமும்
குளிக்க லாமே தேனால்
கிடைத்த இந்த வாழ்வை நாமும்
பிறருக்காக வாழ்வோம்
பிறருக்காக வாழும் வாழ்வை
பெருமை என்று கொள்வோம்
மனிதம் கொண்ட மனிதனாய்
மரணத்தாலே வாழ்வோம் (பிறவிக்காக)

--- மெய்யன் நடராஜ்

உச்சிக்கிளை கழுகு
தரைவீழும் நிழல் கிளறும்
இரைதேடும் கோழிக்குஞ்சு!

தும்பியைப் பிரிந்த சிறகு
கருவேலங்கிளை வந்தமர்கிறது
கருங்குருவி !

உப்புநீரில் முளைக்குமா
உழுது விதைத்த நெல் ?
உழவனின் கண்ணீர் !

--- மகிழ்நன்_மறைக்காடு

கள்ளிச் செடி முட்களில் படர்ந்த
சிலந்தி வலையினுள்
கால்கள் சிக்கி
தவிக்கும் பூச்சிக்கு
இவ்விரவின் கொடூர பற்கள்
கண்ணெதிரே விரியும்.

மின்வெட்டு நேரத்தில்
பாதை இழந்து
தத்தளித்து ஓடும்
பூரானின் கால்களால்
களையப்பட்டிருக்கிறது
எறும்பு புற்றுக்கு போகும் வழி.

இவ்விரவை விரட்டி விட
துடித்துக் கொண்டிருக்கும்
குருடனின் கைகளில்
நாளைய வெளிச்சத்திற்கான
ஒளியென்பது
அடர் கருப்பாய் தெரிகிறது.

கௌலி சத்தத்தில்
திடுக்கிடும் ஊமைக்கு
ஊளையிடும் நாய்களை
விரட்ட தெரியவில்லை
பயம் தொற்றிய
அவனின் கண்களில்
நிலவின் வெளிச்சமே
தற்சமய ஆறுதல்.

இரவென்பது
இப்படியுமிருக்குமென
யாராவது அறிந்தீர்கள்
என்றால் ?..

கொஞ்சம் என் கதவுகளை தட்டாமல்
கடந்து விடுங்கள்
உறக்கமற்ற இரவு
இன்றோடு போகட்டுமெனக்கு...

--- இவன் தங்கா

வேறு மதத்தில்
திருமணம் செய்தவளின்
கணவன்
தண்டவாளத்தில்
தலை பிளந்து கிடந்ததை
தகப்பனும்
வேறு சாதியில்
திருமணம் செய்தவளும்
அவள் கணவனும்
நடுரோட்டில்
வெட்டப்பட்டு துடித்ததை
சகோதரனும்
முறையாக போதித்து
நடத்திய
அவளின் திருமணத்தில்
தங்கள் கௌரவம் பிழைத்தாக
அவர்கள்
பெருமிதம் கொண்டிருந்த
அதே வேளையில்
யாருக்கும் தெரியாமல்
செய்யப்பட்ட ஒரு
கௌரவக் கொலையில்
கொடூரமாக
மரித்துப் போயிருந்தது
அவளது காதல்.

--- பா. வனிதா ரெஜி

எல்லாம் இழந்து
நிற்கும்போது
யாதுமற்ற வெறுமை
இதுவும் கடைசி
பக்கமாக இருக்கலாம்!

சமூகத்தின் சாதனைகளில்
புறக்கணிக்கப்பட்ட
தலை நிமிரா சோகம்
இதுவும் கடைசி
பக்கமாக இருக்கலாம்!

துள்ளி மகிழ்ந்த
சந்தோஷங்களில்
உடல் உபாதைகளின் கொடுமை
இதுவும் கடைசி
பக்கமாக இருக்கலாம்!

எதிர்பாராத சந்தர்ப்பத்தில்
எதிர்வரும் வாகனம்
கண்ணிமைக்கும் நேரத்தில்
இதுவும் கடைசி
பக்கமாக இருக்கலாம்!

வாழ்க்கை போராட்டத்தின்
நடுவே
எதிர்கொள்ளும் வெல்லமுடியாத
சவால்கள்
இதுவும் கடைசி
பக்கமாக இருக்கலாம்!

உழைப்பில்லாத உணவில்
கொழுப்பேறிய இதயத்தமனி
தடைபடும் இரத்தம்
இதுவும் கடைசி
பக்கமாக இருக்கலாம்!

தவிப்புக்கள் சங்கடங்கள்
சமாளிக்கமுடியா தீர்வுகள்
இதுவும் கடைசி
பக்கமாக இருக்கலாம்!

முற்றிப்போன வயோதிகம்
உண்ண உணவின்றி
வைராக்கியமாய்
முதியோர் இல்லம்
இதுவும் கடைசி
பக்கமாக இருக்கலாம்!

குழந்தைகள் பல பெற்றும்
வாழ்வின் நிர்பந்த போட்டியில்
தனிமைச்சிறையாக
இதுவும் கடைசி
பக்கமாக இருக்கலாம்!

வாழ்ந்து முடித்த
வாழ்க்கை காலம் எல்லாம்
நாள்காட்டி தெரியப்படுத்தும்
அச்சூழலில்
கடைசி பக்கம் கடைசியில்
முக்கியமானதாகும்
கல்லறை சுவற்றில்
பொறித்து வைக்கப்படும்
இறந்த தேதியாக!

--- கோவை சசிக்குமார்

மின்னும் பொன்னானது'
கொப்பளிக்கும் குருதியில் நனைந்தபடி
நரம்புகளைத் துண்டித்து'
மெல்லிய தசை நார்களை கிழித்து
எதிர்ப்பின்றி முன்னேறிய
உலோகத்தின்  கூர் முனை.

புனிதனைச் சுமக்கும் மகிழ்வில்
துளிர்த்தது சிலுவை.

வலியில் துவண்டிருந்த உடலைத்
தழுவிக் குளிர்வித்து
வேதனையை
தோள் மாற்றிக் கொள்ள முயன்றது
துக்கத்தில் துடித்த காற்று.

உடலைத் தாண்டி
உயிரைத் தீண்டும்
வேதனையின் உச்சத்தில்
சரிந்திருந்த முகத்தின் காய்ந்த
உதடுகளிலிருந்து
கசிந்தது கழிவிரக்கம்.
என் பிதாவே என் பிதாவே
ஏன் என்னை கை விட்டீர்

எதிரொலி அடங்குமுன்னே
தெளிந்திருந்த முகத்தில்
பரவியது
குற்றவுணர்வில் ஜனித்த வெட்கம்.

எங்கும் பரவியது
கனிந்த இருதயத்தின்
கருணை ஒலி.

பிதாவே இவர்களை மன்னியும்.

சாட்சியாய் இருந்த என்னை
நுற்றாண்டுகளின் திரை கிழித்து
நிகழுக்கு இழுத்தது
மனைவியின் குரல்.

வெளியேறுகையில்
திரும்பிப் பார்த்தேன்.

வெண்குழல் ஒளியில்
உலகின் துயரையெல்லாம்
தாங்கிக் கொண்டிருந்த
உடலின் காயங்களிலிருந்து
வழிந்து கொண்டிருந்தது
சூடான இரத்தம்.

--- சிவகுமார் கனேசன்

நான் போராளி
வாழ்க்கையில்
தோற்று
நிராயுதபாணியாய்
ஆனாலும்
ஒரு ராமன்
"இன்று போய்
போருக்கு
நாளை வா"
அதானால்
வாழ்கிறேன்
இன்னுமொரு
போராட்டத்திற்கு.

--- சசி

திருவிழா காலங்களில்
அருள் வந்து ஆடும் சாமியாடிகள்
காத்து கருப்புகளை விரட்டி
ஊர் எல்லை தாண்டி
விட்டு விட்டு வருகிறார்கள்…
அடுத்த ஊர் சாமியாடிகளும்
அப்படியே விரட்டுகிறார்கள்…
இரண்டு எல்லை கோடுகளுக்குள்
விழிபிதுங்கி நிற்கும் காத்து கருப்புகள்
பின் ஏனோ தமக்குத்தாமே
சமாதானமடைந்துகொள்கின்றன…
தங்களது எல்லைப்பிரச்சனைகள்
திரு விழா முடிந்தவுடன்
தாமாகவே தீர்ந்துவிடும் நம்பிக்கையில்…
ஆனால்…
அவைகளுக்குள் ஓர் ஆதங்கம்
எப்போதும் வந்து முட்டி மோதுகிறது…
உலகமெங்கும்
இரு நாட்டு எல்லைகளில்
சிக்கித்தவிக்கும் மக்களின் வாழ்வு
நம்மைப்போல் அவ்வளவு எளிதாய்
இருந்து விடுவதில்லையே எனும்
வருத்தங்களுடன் அவை
எல்லைகளை வகுத்தவனை
வசைபாடியபடி….
முடியப்போகும் திருவிழாவிற்காக
எல்லைகளில் காத்திருக்கின்றன….
அவைகளுடன் சேர்ந்து
நம் பிரச்சினைகளும்
முடிவுக்கு வராதா என
ஏக்கத்துடன்
காத்திருக்கிறார்கள் மக்கள்…

--- சந்துரு

தலைப்பில்லாத் தலைகள்
------------------------------

எனக்கான உருவங்களை
அவர்களே வரைந்திருந்தார்கள்..
விரும்பிய வண்ணங்களில்
என்ன அழகுப்படுத்தி ஆரவாரித்திருந்தார்கள்
தங்கள் வண்ணங்களை
இன்னொருவர் மேல் பூசிவிட்ட பூரிப்பில்
எக்காளச் சிரிப்புகளைத்
தங்களுக்குள் பரிமாறிக் கொண்டார்கள்
ஒவ்வொரு மனதிலும் நாறிய குப்பைகளை
மற்றொருவர்மேல் ஏற்றிவிட்ட ஆணவம்
நடைகளில் நாடகமாடியது
விரல்மாற்றியோ கைமாற்றியோ
எழுதி ஏமாற்றியதில்
தங்கள் கெட்டிக்காரத்தனத்தைத்
தாங்களாகவே புகழ்ந்து கொண்டார்கள்
மனதின் வக்கிரங்களில்
மிருகங்கள் தாராளமாகவே வெளியேறின
பெயர் மறைத்து
ஏதோ ஒரு பொய்ம்மைக்குள் ஒளிந்து
முகமின்றி உலாவிய அதை
அவ்வளவு சீக்கரம்
நிராகரிக்க முடியவில்லை..
மொட்டைக் கடிதமென்று!

--- முனியாண்டி_ராஜ்

பெயர்
---------

பரிச்சயமான பல மனிதர்களின்
நிஜ பெயரை நான் அறிந்ததேயில்லை

எதிர்த்த வீட்டு டீச்சர்
கம்பௌண்டர் தாத்தா
கடைக்கார அக்கா
சிவன் கோவில் ஐயர்
என நீளும் அந்த பட்டியலில்
சில உறவு முறைகளும் அடங்கும்

என் அப்பாவிடமும்
இப்படியொரு பட்டியல் உண்டு
அதில் தொழிலுக்கு பதிலாக
ஜாதி இருந்தது

நடுத்தெரு கோனாரு
கரிக்கடை பாயி
பெரிய செட்டியார்
மேலத் தெரு தேவர்
என நீளும் அந்த பட்டியல்

என் வரையிலும் கூட பெயர் சொல்லி
நான் அழைக்கப்பட்ட தருணம்
வெகு சொற்பமே

குட்டியம்மாவாக தவழ்ந்து
பாப்பாவாக விளையாடி
சோடாபுட்டியாக வலம் வந்து
நட்பின் பல பரிபாஷையில்
அழைக்கப்பட்டு பிறகு
வயதுக்கும் உறவுக்கும் தகுந்தாற் போல்
அக்காவாகி, அத்தையாகி, மேடமாகி
இப்போது "நிதர்சனா அம்மா"வாகி விட்டேன்

இந்த பட்டியல் பெரும்பான்மையான
பெண்களுக்கு பொருந்தும்..

எண் கணிதம் தந்த அதிர்ஷ்ட பெயராகினும்
சரி
நட்சத்திரம் தந்த ஆதி எழுத்து கொண்ட
பெயராகினும் சரி
மறந்து போன காதலியின் பெயராகினும் சரி
குல சாமியின் அனுக்கிரக பெயராகினும் சரி

எப்படி அலசி எதற்காக
வைக்கப்பட்டிருந்தாலும் சரி இந்த உலகம்
அதன் பார்வையில் நாம் என்னவோ
அப்படித்தான் நம்மை அழைக்கிறது

அடையாளம் தான் பெயர் எனில்
பின் பெயர் என்னும் அடையாளம்
எதற்கோ?

--- மனோனிகா

வரைந்து
முடித்த
மீன்
தாளைக்
கடலாக்கி
நீந்திச்
செல்கிறது...

--- மீயாழ்

நீங்கள் அப்படி
நினைக்கவும் மாட்டீர்கள் தானே?
அந்தக் கோரிக்கை
எனக்காக வைக்கப்பட்டதாக
இருக்கட்டும்..
நேற்று
பூக்களை பறித்தேன்..!

எங்கள் ஊரில்
ஓடாத கடிகாரத்தோடு
ஒரு மணிக்கூண்டு இருக்கிறது.
அருகிலொரு பைத்தியமும்.
மணிக்கொருமுறை அதன் சுவரில்
அவன் என்ன கிறுக்குகிறானென
கவனித்தால் அப்போதைய
சரியான நேரமாக இருக்கும்..

குழம்பிக்கொண்டிருக்கையிலேயே
இது அவ்வளவு தானென
கேட்காத தூரத்திற்கு
கடத்தப்பட்டுக்கொள்கிறார்கள்..
பிறகு தெளிந்தென்ன செய்யவென
குழம்பிவிடுகிறேன்..

நீ நிம்மதியாயிருப்பதற்கு
ஒரு ஆலோசனை சொல்கிறேன்.
முதலில் கவிதைகளை விட்டு
வெளியேறி வா
நிலவே..!

அந்தப் புத்தர் சிலையில்
பிசிறுக்கள் இருப்பது பற்றி
புத்தருக்கு என்ன கவலை..?..

நடந்துக்கொண்டும்
ஓடிக்கொண்டும்
அமர்ந்துக்கொண்டுமிருக்கிறார்கள்.
நடக்கவைக்கப்பட்டும்
ஓடவைக்கப்பட்டும்
அமரவைக்கப்பட்டவர்களுமாய்
இருக்காலம்..

அதிகமாய் சிரிப்பவனின்
ஆழ்ந்த சோகம்
போலிருக்குமொன்றை
தேடிக்கொண்டிருக்கிறேன்
கிடைத்தால் சொல்லுங்கள்..

--- கனா காண்பவன்

அக்கோரத்தை கண்ட இருவிழிகள் பிதுங்கி
வெளிவந்தது....

அதை தடுக்க ஓடாத என் கால்கள் கழன்று
விழுந்தன....

துகிலுறிவதை தடுக்காத கரங்கள் முறிந்தே
போனது....

அவ்வோலங்களை கேட்ட செவி இரண்டும்
திருகிதான் விழுந்தது....

பெருக்கெடுத்த செங்குருதியை நுகர்ந்த நாசி
அறுந்து மிதந்தன....

இவ்வாறாய் பிணமாக விழுந்த என் தேகம்
புணரபட்டது ஈவு இரக்கமற்ற உயிருள்ள
பிணங்களால்....

---அருண்குமார் ப ஆ

என் மன வனமெங்கும்
எதிரொலித்துக்
கொண்டேயிருக்கிறது
அப்பா வாவென்று
அலைபேசி வழியழைத்த
அவனின் ஒற்றைக் குரலோசை

நிசப்தத்தை உருவாக்கிவிட்டு
மீண்டும் மீண்டும்
ஒலித்து
கலைத்துப் போடுகிறது
என் கானகத்தை
அவன் பிதற்றலொலி

தேர்தல் பயிற்சி வகுப்பை
முடித்துவிட்டு
மாவட்டங்கள் பல கடந்து என்
ஊர் செல்லும் பேருந்தை விரைந்து
பிடிக்க வேண்டும்

திரிந்த
என் கானகம்
மீண்டும் தன்
இயல்பு நிலைக்குத் திரும்ப

--- மகேஷ் சிபி

காவிரியே ...!!! கனிவோடு களித்தாடிவா !!!
-------------------------------------
தடைபோட்டுத் தடுத்தாலும் தமிழ்நாட்டின்
வளம்காக்கத்
**தயங்காமல் தவழ்ந்தோடிவா !
இடையூறு கொடுத்தாலும் இமைப்போதும்
அசராமல்
*இயல்பாக எதிர்த்தோடிவா !
விடைகூறி விரைவாக விவசாயம்
செழித்தோங்க
**விருப்போடு சிரித்தோடிவா !
புடைசூழ வருவோரின் புரியாத பகைமாற்றி
**பொலிவோடு புரண்டோடிவா !
அடைத்தாலும் மறித்தாலும் அடங்காமல்
திமிராக
**அணைப்போரை இனங்காணவா !
மடைதாவி விளையாடி மருண்டோடும்
கயல்மீனை
**மறவாமல் உடன்கூட்டிவா !
நடைபோட்டு மிடுக்காக நதியேயுன்
எழிலோடு
**நலம்வாழக் குதித்தோடிவா !
கடைத்தேற வழிபார்த்து கருவாயுன்
கவிகேட்டுக்
**கனிவோடு களித்தாடிவா ....!!!

--- ஷியாமளா ராஜசேகரன்

பூங்காவுக்குள் மது அருந்தக் கூடாது
அறிவிப்பைத் தொடர்ந்து
வண்டுகள் வருவதில்லை!!

--- முரளி

குறள் இறகு

--------------

வகுப்பறையை வானமாக்கும்
வழி அறிந்த ஆசிரியை
இசை ஒலித்தால் எழுத வசப்படாதென
வளைதுறந்த வலக்கரத்தால்
தன் இடக்கரந்தொட
பறக்கத்துடித்த மழலைகள்
தொட்டனைத் தூறும் மணற்கேணி
எனத்தொடங்கி
திருக்குறளிறகை அசைத்துப் பறந்தன.

--- வினோத்குமார்_பா

நிலைவாசல் கண்ணாடி
காத்திருக்கிறது,

கலைந்து சென்ற
குருவிகள்...காலம் கடந்தாவது

வந்து கட்டட்டும் கூடு என்று...

--- சலீம் கான்

சட்டங்களை
காகிதங்களில் எழுதிய
நாங்கள் தான் கரையான்களையும்
அதனுள் ஓட்டையிட ஒளித்து வைத்தோம்
சந்ததிகள் எல்லாம் பாதுகாப்பாய் தவறு
செய்ய.

--- Pearl Sys

சுமைகள்

----------------

இரவுச் சுமைதாங்கியின்மீது
இமைகளை இறக்கிவைத்தேன்
----கனவுகள்!
கனவின் நிறங்களைக்
கண்விழித்துப் பார்த்தபோது
----வெறுமைகள் !

எண்ணச் சுமைகளை
ஏடுகளில் எழுதிவைத்தேன்
----கவிதைகள்!
கவிதைச் சுமைகளைக்
காற்றுவெளியில் விற்றபோது
----குப்பைகள்!

தோல்வியின் சுமைகளைத்
தோள்மீது தூக்கிவைத்தேன்
----துயரங்கள்!
துயரக் குளங்களில்
காலூன்றிப் பூத்தபோது
----தாமரைகள்!

நாளையின் சுமைகளை
நேற்றுக்குள் புதைத்துவிட்டேன்
----சிறகுகள்!
பயணத்தின் சுமைகளைப்
பாதைமீதே கிடத்திவிட்டேன்
----சுகங்கள்....!

--கவித்தாசபாபதி